**இலங்கை றக்பி - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை றக்பியின் (''இலங்கை றக்பி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, இலங்கை றக்பியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் கணக்காய்வின் நோக்கெல்லை பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை றக்பி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை றக்பியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

இலங்கை றக்பியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை றக்பியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு இலங்கை றக்பி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ்கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின்

பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை,பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை

---

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை றக்பியின் திரட்டப்பட்ட நிதியம் கடந்த நான்கு வருட காலப்பகுதியில் ரூபா 56.8 மில்லியனால் குறைவடைந்துள்ளது. மீளாய்வாண்டின் மொத்தச் சொத்துக்களுடன் ஒப்பிடும் போது திரட்டப்பட்ட நியத்தின் மறை மிகுதி ரூபா 297 சதவீதமாக இருந்தது. இந்நிலைமை இலங்கை றக்பியின் தொடர்ந்தியங்கும் தன்மையை மோசமாகப் பாதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும், | குறித்துக் கொள்ளப்பட்டது. எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிறைவேற்றுக் குழு இந்நிலைமையினை கருத்திற் கொண்டு இவ்விடயத்திற்கு தீர்பு காண்பதற்கான சீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிறைவேற்றுக் குழு இந்நிலைமையைக் கருத்திற் கொண்டு சீரமைப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை. | | |

### 1.5.2 கணக்காய்விற்கான ஆவணச் சான்றின்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| பெற வேண்டியவைகள் | 247,910 | மீதி உறுதிப்படுத்தல்கள் | எதிர்காலத்தில் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| செலுத்த வேண்டியவைகள் | 4,821,935 | மீதி உறுதிப்படுத்தல்கள் | | |
| இருப்புக்கள் | 706,180 | பௌதீகப் பரிசோதனை அறிக்கைகள் | | |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேலாக நிலுவையாகவுள்ள மொத்தம் ரூபா 4,442,470 ஆன ஏழு பெற வேண்டிய மிகுதிகள் மற்றும் 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள மொத்தம் ரூபா 214,523 ஆன வேறொரு மிகுதிகள் என்பவற்றை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் நிர்வாகக் குழுவிற்குச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வெளியாரிடமிருந்து பெற வேண்டியவைகளை அறவிடுவதறகு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்தப்பட வேண்டியவை

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு ஆண்டிற்கு மேலாக காணப்பட்ட மொத்தம் ரூபா 4,969,450 ஆன நாற்பத்தொரு செலுத்த வேண்டிய மிகுதிகள் மற்றும் 03 ஆண்டுகளிற்கு மேலாக தீர்ப்பனவு செய்யப்படாதிருந்த ரூபா | குறித்துக் கொள்ளப்பட்டதுடன் போதுமானளவு நிதி பெறப்பட்ட பின்னர் எதிர்காலத்தில் தீர்க்கப்படுவதற்குத் தேவையான | வெளியாருக்குச் செலுத்த வேண்டியவற்றை காலரீதியாகத் தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட |

| | | |
|---|---|---|
| 24,258,241 ஆன தொகை என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் பெறுகை திட்டத்தை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | 2006 இன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 1 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க பிரமாணங்களின் 7(xii) ஆம் பிரிவு | ஆண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களிற்கு முன்னர் அங்கீகாரத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | அடுத்த நிதியாண்டில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2016 இன் 1 ஆம் இலக்க தேசிய விளையாட்டுச் சங்க பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 8,741,462 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 4,860,940 ஆகும். எனவே , நிதி விளைவுகளில் ரூபா 3,880,522 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. செலவுகள் ரூபா 16,421,456 ஆல் அதிகரித்தமையே இப் பின்னடைவிற்கான காரணமாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தனியார் நிறுவனமொன்றுக்கு ரூபா 7,725,448 ஐச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டமையால் இலங்கை றக்பி | தற்போதைய கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக விளையாட்டுப் | எதிர்காலத்தில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு தேவையான |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 1,313,722 ஆன தொகையை வட்டியாகச் செலுத்தியிருந்தது. | போட்டிகள் எதுவும் நடாத்தப்படவில்லை. எனவே அனுசரணை யாளர்களும் வெளியே தள்ளப்பட்டிருந்ததுடன் இலங்கை றக்பி தற்போது சில நிதி நெருக்கடிகளை எதிர் கொண்டுள்ளது. எமது நிர்வாகச் செலவுகளை இலங்கை றக்பியினால் ஈடுசெய்யக்கூடிய நிலையில் நாம் இருக்காததுடன் அதில் ஊழியர்களின் சம்பளமும் அடங்குகின்றது. மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களினால் எமது கடன்கொடுத்தோருக்கு குறிப்பிட்ட காலத்தில் செலுத்துவதற்கு நிதி நிலைமையை உயர்த்துவதற்கு புதிய அனுசரணையாளர் களை கண்டு பிடித்து ஒழுங்குபடுத்துவதற்கு எமது குழு தம்மால் இயன்றவரை முயற்சி செய்து வருகின்றது. | நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (ஆ) | இலங்கை றக்பி அரசியலமைப்பின் 14.1(ஓ) மற்றும் (ஓ) பிரிவுகளின் பிரகாரம் தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகள் றக்பி கால்ப்பந்தாட்டச் சங்கம், இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கம், இலங்கை றக்பி கால்பந்தாட்ட நடுவர்கள் சங்கம் மற்றும் இலங்கையின் மாகாண றக்பி கால்ப்பந்தாட்ட கழகங்கள் உள்ளடக்கிய இலங்கை றக்பி உறுப்பினர்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்த பின்னர் 45 நாட்களினுள் பட்டயக் கணக்காளர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் அலுவலகப் பொறுப்பாளர்கள் மற்றும் ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலகத்தினதும் குழு உறுப்பினர்களின் சுயவிபரக் கோவை, உரிய வருடாந்த | 2021 ஆம் ஆண்டில் இதனை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும | இலங்கை றக்பி அரசியலமைப்பின் பிரகாரம் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பொதுக் கூட்டத்தின் உறுதிப்படுத்தப்பட்ட கூட்டக் குறிப்பு பிரதி மற்றும் வரவுச் சான்றிதழ், கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் சான்றுறுதிப்படுத்திய பிரதி மற்றும் அத்தகைய கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் அவர்களது வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்பற்றப்பட்டிருந்ததை உறுதிப்படுத்துவதற்கு அவர்களது உறுப்பினர் பட்டியல், இலங்கை றக்பி வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்னரான விளையாட்டுக்கள் மற்றும் ஏனைய நிகழச்சித்திட்டங்களின் விபரங்கள் உள்ளடக்கிய ஏனைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் இலங்கை றக்பி இத் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை றக்பிக்காக ஒரு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியணி என்பவை காணப்படவில்லை. | எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியணி என்பவற்றை தயாரிப்பதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்படும். | பயனுறுதி வாய்ந்த மனித முகாமைத்துவத் திற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று மற்றும் பதவியணி என்பன தயாரிக்கப்படல் வேண்டும். |